பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 27 | சனிக்கிழமை | 08.02.2025 | அதிர்வு 190

## மின்சாரம் தாக்கி 6 வயது சிறுமி பலி

### புளியங்குளத்தில் சோகம்

(கி.வசந்தன்)

மின்சாரம் தாக்கி சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, 06



# லசந்தவின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டும்!!!

### மகள் அனுப்பிய கடிதத்தைப் பார்த்து வேதனையடைந்தேன் என்று நாடாளுமன்றில் நேற்று பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



“படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகளான அஹிம்சா விக்கிரமதுங்க அனுப்பிவைத்த கடிதம் எனக்குக் கிடைத்தது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பார்த்து வேதனையடைந்தேன். அதிகளவில் கரிசனை கொண்டுள்ளேன். பதில் கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவுக்கும் அவரது குடும்பத்தாருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் என்றும் உறுதியாகவே இருக்கின்றோம்.”

- இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். 07

# மேற்குலகைப் பகைத்துக்கொண்டே புலிகளுக்கு முடிவு கட்டினார் மஹிந்த



### அதனால் அவருக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என்று கூறுகின்றார் சரத் வீரசேகர

“பிரபாகரனை உயிருடன் கொண்டு செல்ல மேற்குலக நாடுகள் முற்பட்டன. அதற்கு மஹிந்த இடமளிக்கவில்லை. மேற்குலகைப் பகைத்துக்கொண்டுதான் மஹிந்த போரை முடிப்பதற்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கினார்.”

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:– 07




சீனச் சார்பு நிலைப்பாடு கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசு அதிகாரத்துக்கு வந்தமையை அடுத்து பெய்ஜிங்குக்கும் கொழும்புக்கும் இடையே நெருக்கமான உறவுகள் மேலும் இறுக்கமடைந்து வருகின்றன எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்தப் பின்புலத்தில் சீனாவின் மிக முக்கிய தூதுக் குழு ஒன்று கொழும்பு வர இருப்பதாகத் தெரிகிறது.

சீனாவின் தேசிய இன விவகார அமைச்சர் ஃபேன் யூ மற்றும் அந்த நாட்டின் தேசிய இன விவகார ஆணையத்தின் ஆறு உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை 5 நாள்கள் இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

இந்தக் குழுவினர் வடக்கு – கிழக்குக்கும் விஜயம் செய்ய இருக்கின்றனர் என்பது முக்கிய விவகாரமாகும்.

வடக்கு, கிழக்கு உட்பட இலங்கை 06

# ஓட்டோவின் மேலதிக பாகங்களுக்கு தண்டப் பணம் விதித்த பொலிஸார்

## மேலதிக பாகங்களை உடைத்து வீசிய சாரதி



(கி.வசந்தன்)

வவுனியாவில் "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தில் ஓட்டோ சாரதிக்குத் தண்டப் பணம் விதிக்கப்பட்டதால், அதிருப்தியடைந்த ஓட்டோ சாரதி தனது வாகனத்தின் மேலதிக பாகங்களைத் தனது காலால் உதைந்து உடைத்து எறிந்த சம்பவம் வவுனியாவில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இலங்கை அரசால் அமுல்படுத்தப்பட்டுள்ள "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தின் ஓர் அங்கமாக ஓட்டோ, பஸ் உள்ளிட்ட வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக பாகங்களை அப்புறப்படுத்துமாறு பொலிஸார் தெரித்துள்ளதுடன், அவற்றை அகற்றுவதற்குக் கால அவகாசமும் வழங்கியிருந்தனர்.

அந்தவகையில் வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, அந்தப் பகுதியினூடாகப் பயணித்த ஓட்டோ ஒன்றை வழிமறித்த பொலிஸார், ஓட்டோவில் பொருத்தப்பட்டிருந்த மேலதிக உதிரிப் பாகங்களை அகற்றுமாறு தெரிவித்திருந்ததுடன், தண்டக் குற்றப் பத்திரத்தையும் வழங்கியிருந்தனர்.

இதனால் அதிருப்தியடைந்த ஓட்டோ சாரதி பொலிஸாரின் முன்னிலையிலேயே குறித்த உதிரிப்பாகங்களைக் காலால் அடித்து உடைத்திருந்ததுடன், ஏனைய பாகங்களையும் கழற்றி வீசிய சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சாரதியின் செயற்பாட்டை வேடிக்கை பார்த்த பொலிஸார் அமைதியாக அங்கிருந்து சென்றிருந்தனர்.

# கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐ.தே.கவுடன் மாத்திரமே பேச்சு

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தமது அணிக்குச் சவால் கிடையாது எனவும், கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமே தற்போது பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அனைவருக்கும் அரசியல் செய்யும் உரிமை இருக்கின்றது. அந்தவகையில் மொட்டுக் கட்சி செயற்படுகின்றது. அவர்களின் நடவடிக்கை எமக்குச் சவால் கிடையாது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைவதையே கட்சி ஆதரவாளர்கள் விரும்புகின்றனர். சிலர் எதிர்த்த போதிலும், பெரும்பாலானவர்கள் ஆதரவு நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப் பதவியில் எவ்வித மாற்றமும் வராது. சஜித் பிரேமதாஸவே தலைவர். அவருக்கே மக்கள் ஆதரவு உள்ளது.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்." – என்றார்.



# நாட்டில் சோளம் அறுவடையினை அதிகரிக்க விசேட வேலைத்திட்டம்

எதிர்வரும் பெரும்போகத்தில், சோள அறுவடையில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக விவசாய மற்றும் கால்நடை அமைச்சு தெரிவித்துள்ளது.

20,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சோள பயிர்செய்கையை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன குறிப்பிட்டார்.

சோள அறுவடையை கொள்வனவு செய்வதற்கும் அரசாங்கம் தலையீடு செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். மாநகர ஆணையாளருக்கு எதிரான இரண்டாவது வழக்கும் மன்றால் தள்ளுபடி




**(என்.புவியரசன்)**

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளருக்கு எதிராக முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் சார்பில் இரண்டாவது தடவையாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் மாவட்ட நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆயுள் காலத்தில் மேயராக இருந்த வி.மணிவண்ணன் சபையின் அனுமதி இன்றி செலவு செய்த தொகையை உங்கள் சொந்தப் பணத்தில் இருந்து செலுத்துமாறு யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரால் முன்னாள் மேயருக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பியிருந்தார். அவ்வாறு கடிதம் எழுதிய காலத்தில் அதே நிதிக் கொடுப்பனவு தொடர்பில் நீதிமன்றில் ஒரு வழக்கு இடம்பெறும் சமயம் இவ்வாறு கடிதம் அனுப்பியமை நீதிமன்ற அவமதிப்பு என வி.மணிவண்ணனால் 2024 ஆம் ஆண்டு முதலாவது தடவை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரணை செய்யும் முகாத்தரம் அற்ற மன்றில் வழக்குத் தாக்கல் செய்தமையால் வழக்கு அப்போது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இதற்கமைய 2024.08.07 அன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் மீண்டும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீது விசாரணைகள் இடம்பெற்று வந்தன. நேற்றும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முகத் தோற்றம் அளவில் எண்ணிப்பித்து காண்பிக்கத் தவறியதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி எஸ். சதீஸ்கரன் தீர்ப்பளித்தார்.

# ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர்களில் 59 பேர் மரணம்

## நாடாளுமன்றில் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர்களில் 59 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

2025 ஜனவரி 20ஆம் திகதி வரையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டே அமைச்சர் மேற்படி தகவலை நேற்று வெளியிட்டார்.

ரஷ்ய இராணுவத்தில் 554 இலங்கையர்கள் இணைந்துள்ளனர் என்றும், அவர்களில் யாரும் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர்களை விடுவித்து, நாட்டுக்கு மீள கொண்டுவருவதற்குரிய முயற்சி இடம்பெற்று வருகின்றது என்றும் வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறினார்.

# வட பகுதி கடல் பிராந்தியத்தை சீனாவுக்கு வழங்குவதற்கு முயற்சி

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் தெரிவிப்பு




(எஸ்.ரகுதீஸ்)

வட பகுதி கடல் பிராந்தியத்தை சீனாவுக்கு வழங்குவதற்கு கடற்படை முயற்சிக்கிறது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அ.அன்னராசா தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு மீனவர்களை இந்தியாவுடன் மோத விட்டுவிட்டு அரசாங்கம் சீனாவுடன் இணைந்து, சீனாவிடமிருந்து உதவிகளை பெறுவதற்காக வடக்கு மீனவர்களின் உண்மை நிலையை மறைக்கின்றது. நாங்கள் இந்தியாவுடன் பேசவேண்டும். இந்தியா எமது தொப்புள் கொடி உறவு. சீனாவின் உதவியும் வேண்டாம். சீனாவின் ஆதரவும் வேண்டாம்.

இலங்கை கடற்படையின் செயற்பாடுகளால் சிறிய தொழில் செய்யும் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக, கடந்த ஒரு மாதமாக கடற்றொழில் நீரியல்வள உதவி பணிப்பாளரின் சிபாரிசில் குறிப்பிட்ட சில தொழில் முறைகளை தடைசெய்வதாக சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், சட்டவிரோத இழுவைமடி தொழில் செய்யப்படுகிறது. வடமராட்சி கிழக்கு பகுதியில் சுருக்குவலை தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

ஆனால், சிறிய தொழில் செய்யும் மீனவர்களின் வலைகளை மாத்திரம் கைப்பற்றுகிறார்கள். பாரம்பரிய முறையில் தொழில் செய்யும் மீனவர்களின் வலைகளை கைப்பற்றும் கடற்படைக்கு ஏன் உள்ளூர் இழுவைமடி தொழிலை செய்பவர்களை பிடிக்க முடியாது? சுருக்கு வலையை பிடிக்க முடியாது? இலங்கை கடற்படை சிறு கடற்தொழிலாளர்களை வஞ்சிக்கிறது.

சிறு மீனவர்களுக்கு ஒரு சட்டமும், முதலாளி வர்க்கத்துக்கு ஒரு சட்டமும்தான் கடற்படையிடம் காணப்படுகின்றது. எமது கடல் பகுதியை சீனாவுக்கு வழங்குவதற்கு கடற்படை முயற்சிக்கிறது." – என்றார்.

# சமூக மாற்றத்திற்கான ஊடக மையம் யாழ். வடமராட்சி கிழக்கில் ஆரம்பம்




யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி, தாளையடியில் எதிர்வரும் 12 ஆம் திகதி சமூக மாற்றத்திற்கான ஊடக மையம் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

உலகெங்கும் வாழும் அனைத்து ஊடகவியலாளர்களையும் ஒன்று திரட்டி சர்வதேச ரீதியில் இந்த ஊடக மையம் செயற்படவுள்ளது.

சமூக மாற்றம் மூலமே குற்றமற்ற சுதந்திரமான தேசத்தை கட்டியெழுப்பி சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியும் என்ற கோட்பாட்டுடன் சமூக மாற்றத்திற்கான ஊடக மையம் தனது செயற்பாட்டை சர்வதேச ரீதியில் ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கையில் காணப்படும் அனைத்து ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் ஒரு குடையின் கீழ் ஒன்றுசேர்த்து சமூக மாற்றத்திற்கான ஊடக அமைப்பாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சமூக மாற்றத்திற்கான ஊடக மையத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சர்வதேச ரீதியாக அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் பாடசாலை ஒன்றில் உயர்தர மாணவன் மீது தாக்குதல்!

## காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதி

(வவுனியா நிருபர்)

வவுனியா நகரை அண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர்தர மாணவன் ஒருவர் மீது பாடசாலை வளாகத்தில் வைத்து இளைஞர்கள் தாக்குதல் நடத்தியதில் அந்த மாணவன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரை அண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர்தர மாணவன் ஒருவருக்கும், கீழ் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களாக குறித்த முரண்பாடு நீடித்து வந்த நிலையில், கீழ் வகுப்பு மாணவன் வெளி இளைஞர்களை அழைத்துச் சென்று உயர்தர மாணவன் மீது பாடசாலை வளாகத்தில் வைத்துத் தாக்குதல் நடத்தியுள்ளார். இதனால் உயர்தர மாணவன் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# குளோபல் ஆர்ட்ஸ் சர்வதேச நடன திருவிழா

குளோபல் ஆர்ட்ஸ் நிறுவனமானது அமெரிக்கா முத்தமிழ் பல்கலைக்கழகம் மற்றும் கலாநிதி ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் நுண்கலை பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து “குளோபல் ஆர்ட்ஸ் சர்வதேச நடன திருவிழா -2025“ என்ற தொனிப்பொருளிலான நடன நிகழ்ச்சியை நாளை கொழும்பு இராமகிருஷ்ணன் மிஷன் மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இதனைமுன்னிட்டுநேற்றுவெள்ளிக்கிழமைகொழும்புவெள்ளவத்தை குளோபல் டவரில் ஊடக சந்திப்பு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் குளோபல் ஆர்ட்ஸ் நிறுவனத்தின் இயக்குநர்கள் செல்லத்துரை பிரதீஸ் குமார், ஸ்ரீதேவி பிரசாத் , ஜெயாஞ்சலி இன்டர்நெசனல் யூகே நிறுவனத்தின் இயக்குநர் தயாபர மூர்த்தி நிர்மலன் மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்த பல்வேறு நாட்டிய நிறுவனங்களின் நடன ஆசிரியர்களும் கலந்துக் கொண்டனர்.

மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தும் வண்ணம் குளோபல் ஆர்ட்ஸ் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நாடுகளில் நடன விழாக்களை நடத்துவது குறிப்பிடத்தக்கது. குளோபல் ஆர்ட்ஸ் நிறுவனமானது நாட்டியம் மட்டுமன்றி ஏனைய கலைகளுக்கும் முன்னுரிமை வழங்கும் பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனமாகும்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த நடன ஆசிரியர்களும் இலங்கையில் உள்ள நடன ஆசிரியர்களும் இணைந்து நாட்டியத்துறையில் பாடத்திட்டத்தை நிறைவு செய்து பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழாவினை நடத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் போது உரையாற்றிய குளோபல் ஆர்ட்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் செல்லத்துரை பிரதீஸ் குமார், குளோபல் ஆர்ட்ஸ் நிறுவனமானது அமெரிக்கா முத்தமிழ் பல்கலைக்கழகம் , கலாநிதி ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் நுண்கலை பல்கலைக்கழகம் மற்றும் ஜெயாஞ்சலி இன்டர்நெசனல் யூகே நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கையில் தமது பணிகளை மேற்கொள்வதற்கான ஆரம்ப நிகழ்வு கல்முனையில் ஜெ.ஜெயலலிதா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி சௌமியா தலைமையில் இடம்பெற்றதாக தெரிவித்தார்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழுவதும் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற ஆயத்தங்கள் இடம்பெற்று வருகையில் அந்தத் தேர்தலுக்கு முன்னதாக இந்தத் தூதுக்குழு இங்கு வருவதில் ஓர் இரகசிய சூட்சுமம் பொதிந்திருப்பதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இனத்துவப் பிரதேசங்களுக்கு அல்லது வட்டாரங்களுக்கு இடையில் சகோதர நகர ஒப்பந்தங்களைச் செய்ய ஊக்குவிப்பது தொடர்பாக இலங்கையின் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகமும் சீனாவின் தேசிய இனத்துவ அமைச்சும் ஒப்பந்தங்களை செய்ய விருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. அதற்கான இறுதி ஏற்பாடுகளை செய்வதற்காகவே சீனக் குழு இலங்கைக்கு வருகிறது.

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா அண்மையில் சீனாவுக்கு விஜயம் செய்தமையை அடுத்துக் கட்டவிழும் திட்டம் இது என்றும் கூறப்படுகின்றது.

இனத்துவ ரீதியில் வடக்கு – கிழக்கில் உள்ள சில நகரங்களை சீனாவில் உள்ள சில நகரங்களுடன் சகோதர நகர ஒப்பந்தங்களைச் செய்ய வைப்பதும் இத்திட்டத்தில் அடங்கும் என்று தெரிகின்றது.

வடக்கு – கிழக்கில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரே, உள்ளூராட்சி நிர்வாகங்கள் நேரடியாக அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற சமயத்திலேயே, அரச அதிகாரிகள் மூலம் சீன நகரங்களுடன் நட்புறவு சகோதரத்துவ ஒப்பந்தங்களைச் செய்து, அவற்றை இறுதிப்படுத்த இலங்கை அரசு முயல்வதாக சில வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

உதாரணத்திற்கு வடக்கில் இருக்கும் யாழ்ப்பாண மாநகர சபைக்கு உள்ளூராட்சி தேர்தல் மூலம் மேயரும் சபையும் தெரிவாவதற்கு முன்னரே அந்த நகரத்தை சீனாவினுடைய ஒரு நகரத்தோடு சகோதர நட்புறவு ஒப்பந்தத்தைச் செய்ய வைத்து அதனை இறுதிப்படுத்தி விட அரசு முயல்கின்றது எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் வரக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் கொண்ட நகர நிர்வாகங்கள் சீன நகரங்களுடன் நட்புறவு சகோதரத்துவ ஒப்பந்தங்களைச் செய்ய இணங்காத நிலை ஏற்படக் கூடும் என்பதால், தேர்தலுக்கு முன்னரே – மக்கள் பிரதிநிதித்துவ நிர்வாகங்கள் உள்ளூராட்சி சபைகளுக்கு வர முன்னரே – இத்தகைய சகோதர நகர ஒப்பந்தங்களைச் செய்து, விடயத்தை இறுதிப்படுத்தி, இறுக்கி விட கொழும்பு எத்தனிப்பதாகத் தெரிகிறது.

அதைவிடவும் இப்போது கொழும்பு வர இருக்கும் சீனப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் தேசிய இனத்துவ விவகார அமைச்சும், அந்த ஆணையமும் சீனாவில் ஒரு முக்கிய மோசமான விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதை இலங்கையின் சிறுபான்மையின மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

சீனாவில் சிறுபான்மையினரான ஹுய் மற்றும் உய்குர் ஆகிய இரண்டு சீன முஸ்லிம் இனக் குழுமங்களும் திபெத்தின் பௌத்தர்களும் சீன ஆட்சியாளர்களினால் மிக மோசமான முறையில் இன அடக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றார்கள் என்பது பரகசியமான விடயம்.

அந்த அடக்குமுறை விவகாரங்களை நேரடியாக கையாள்வது சீனாவின் தேசிய இனத்துவ விவகார அமைச்சு என்பதும் அந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சரும் அதன்ஆறு உயரதிகாரிகளுமே இப்போது இலங்கை வருகின்றார்கள் என்பதும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விவகாரங்களாக உள்ளன.

ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் பேரினத்தவர்கள், சிறுபான்மை இனங்கள் மீது வெற்றிகரமாக தங்களின் மேலாதிக்கத்தை – அடக்குமுறையை – எவ்வாறு திணிக்க முடியும் என்பதை அதில் கைதேர்ந்த சீனத்தரப்பு மூலம் அவர்களின் இந்த வருகையையொட்டி அவர்களிமிருந்தே கொழும்பு நேரடியாகப் பாடம் கற்றுக் கொள்ளும் என்பதும் ஊகிக்கத்தக்கதே.

பல ஆண்டுகளாக திபெத்தியர்கள் மற்றும் ஹுய் மற்றும் உய்குர் இனக் குழுக்கள் மீதும் மிக மோசமான அடக்குமுறையை ஏவி விட்டிருக்கும் சீனா, அந்த அடக்கு முறையில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் தரப்பை கொழும்பின் அனுசரணையோடு வடக்கு, கிழக்குக்கும் அனுப்புகிறது.

இது விடயத்தில் இலங்கையின் சிறுபான்மையினரான தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த இரு நாட்டு நகரங்களின் சகோதரத்துவ நட்புறவு ஒப்பந்தம் என்ற பொறியில் சிக்காமல் தங்கள் நகரங்களை காப்பாற்றிக் கொள்வது சிறுபான்மையினரின் அரசியல் தலைமைத்துவங்களைப் பொறுத்தது.

நேரத்துடன் முன்னெச்சரிக்கை தரப்பட்டு விட்டது. இனி விடயத்தை கையாள்வது அரசியல் தலைவர்களிடமும் மக்களிடமும்தான்.

\+ \+ \+

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் இறுதிக் கிரியைகளின் போது அச்சுறுத்தல் அரசியலில் ஈடுபட்ட அரூபக்கரங்களைகண்டுபிடிக்கும்பணியைபொலிஸார் ஆரம்பித்து இருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

இதையொட்டி மாவை சேனாதிராஜாவின் புதல்வரிடம் பொலிஸார் நேரடியாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தில் மாவை சேனாதிராஜாவை ஆதரிக்காத 19 உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களே மாவையின் மரணத்துக்குக் காரணம் எனத் தெரிவித்து, அவர்களின் படங்களுடன் பனர்கள் பல இடங்களில் கட்டப்பட்டன. அந்த 19 பேரும் மரண சடங்குக்கு வரக்கூடாது என அவர்களை எச்சரிக்கும் விதத்தில் அந்த பனரின் வாசகங்கள் அமைந்திருந்தன. இடுகாட்டில் கூட பலர் பார்த்திருக்க அந்த பனர் கொண்டு வந்து கட்டப்பட்டுள்ளது.

அந்த 19 பேரையும் இழிவுபடுத்தி சமூக வலைத்தளங்களிலும் திட்டமிட்டுத் தகவல்கள் பரப்பப்பட்டிருந்தன.

தங்களை அநாமேதயங்களாக வைத்துக் கொண்டு இத்தகைய அரசியல் அடாவடித்தனத்தில் ஒரு குழு ஈடுபட்ட பின்புலத்தில், கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் மாவை சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வுகளில் பங்குபற்றுவதைத் தவிர்த்துக் கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கட்சியின் தலைமை நேரடியாக தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் செய்து கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர் என பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தப் பொலிஸ் நிலையம் காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குள் வருகின்றது.

இந்த விவகாரத்தை பொலிஸ் தரப்பு 'சீரியஸ்' விவகாரமாகப் பார்க்கின்றது எனவும் தெரிகின்றது.

"மாவையின் மரணத்துக்குக் காரணம் எனக் குறிப்பிட்டு அச்சுறுத்தல் பனர் கட்டியமை தொடர்பில் கட்சித் தலைமையே நேரடியாக பொலிஸுக்கு முறைப்பாடு செய்துள்ளது. அத்துடன் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் உட்பட இரு சட்டத்தரணிகள் என சமூகத்தில் மதிப்பார்ந்த பலருக்கு எதிராக இந்த விடயம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனால் இவ்விடயத்தை மிக முக்கிய விவகாரமாகப் பார்க்கின்றோம்" – என்று பொலிஸ் பக்கத்தில் கூறப்படுகின்றது.

பனர் அச்சிட்ட தரப்பினர், அச்சிட்ட அச்சகம், அதை கட்டியவர்கள், அதே சமயம் மாவை சேனாதிராஜாவின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய சிலரை அச்சுறுத்தியவர்கள் ஆகியோர் பற்றிய புலனாய்வு விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்திருக்கின்றனர்.

பொலிஸார் அவர்களைக் கண்டுபிடித்தால், அவர்கள் கைது செய்யப்படுவதும், கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்படுவதும் நிச்சயம் எனவும் தெரிகிறது.

இத்தகையோரை சட்டத்திலிருந்து காப்பதற்கும், பிணை அனுமதி பெறுவதற்கும் கூட ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்தான் வரவேண்டியிருக்குமோ, என்னவோ தெரியவில்லை....!

---

## மின்சாரம் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புளியங்குளம், பழையவாடி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை 6 வயது சிறுமி ஒருவர் கொய்யா மரத்தில் ஏறி விளையாடியுள்ளார். அவர் தவறுதலாக கீழே வீழ்ந்தபோது நீர் இறைக்கும் இயந்திரத்துக்குச் சென்ற மின்சார வயரின் இணைப்பில் சிக்கியதால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வீட்டார் மேற்படி சிறுமியை மீட்டு வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்த போதும் சிறுமி வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே மரணமடைந்துள்ளார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் புளியங்குளம், பழையவாடி பகுதியைச் சேர்ந்த 6 வயதுடைய ந.மதுசாளினி என்ற சிறுமியே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருள் வாங்க சித்தியின் நகையைத் திருடிய இளைஞர் கைது!



போதைப்பொருளை வாங்க சித்தியின் நகைகளைக் களவாடிய குற்றச்சாட்டில் 21 வயது இளைஞரையும், திருட்டுக்கு உடந்தையாகச் செயற்பட்ட குற்றச்சாட்டில் 3 இளைஞர்களையும் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

யாழ். திருநெல்வேலி பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 3ஆம் திகதி 19 அரை பவுண் நகைகள் களவாடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர். விசாரணைகளின் அடிப்படையில், முறைப்பாட்டாளரின் வீட்டில் வசித்து வந்த, முறைப்பாட்டாளரின் அக்காவின் மகனே திருட்டில் ஈடுபட்ட சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், களவாடப்பட்ட நகையில் ஒரு தொகுதியும், ஒரு தொகை பணமும் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரிடம் இருந்து 2 கிராம் 400 மில்லி கிராம் உயிர்க்கொள்ளி போதைப்பொருளான ஹெரோயினையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் திருட்டுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் மேலும் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

திருட்டில் ஈடுபட்டவர்கள், போதைக்கு அடிமையானவர்கள் எனவும், போதைப்பொருட்களைக் கொள்வனவு செய்யவே அவர்கள் திருட்டில் ஈடுபட்டனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## லசந்தவின் குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது படுகொலை செய்யப்பட்ட "சண்டே லீடர்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அரச தரப்புக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் மற்றும் லசந்த விக்கிரமதுங்க படுகொலை விசாரணைகள் தொடர்பில் சிவில் தரப்பினர் முன்னெடுத்துள்ள போராட்டங்கள் குறித்து உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கூறுகையில்,

"படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க தொடர்பில் பத்திரிகைகளில் பிரதான செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்குச் சட்டமா அதிபர் திணைக்களம் பொறுப்புக்கூற வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் லசந்த விக்கிரமதுங்க உட்பட பல படுகொலைக்கான நீதி தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தை அடிப்படையாகக் கொண்டு தற்போது பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிறந்த அதிகாரிகள் உள்ளார்கள். இருப்பினும் ஒருசில பிரச்சினைகள் காணப்படுகின்றன. படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க விவகாரம் தேசிய பிரச்சினையாகவே பார்க்கப்படுகின்றது. ஆகவே, இந்த விடயம் தொடர்பில் முழு நாள் விவாதத்தை நடத்த வேண்டும். ஏனெனில், இவ்வாறான பிரச்சினைகள் இனி தோற்றம் பெறக் கூடாது." – என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய,

"படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் என்றும் உறுதியாகவே இருக்கின்றோம்.

லசந்தவின் மகளான அஹிம்சா விக்கிரமதுங்க அனுப்பி வைத்த கடிதம் எனக்குக் கிடைத்தது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பார்த்து வேதனையடைந்தேன். அதிகளவில் கரிசனை கொண்டுள்ளேன். பதில் கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

நீதிமன்றம், சட்டமா அதிபர் திணைக்களம் நீதியை நிலைநாட்டுவதற்காகவே செயற்படுகின்றது. அதற்கான சூழலை அரசு ஏற்படுத்திக் கொடுக்கும்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிறந்த அதிகாரிகள் உள்ளார்கள். இருப்பினும் திணைக்களம் ஒரே போக்கில் செயற்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

தற்போதைய நிலைவரம் குறித்து ஜனாதிபதி சட்டமா அதிபருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அவசியமாயின், புதிய விசாரணைகளை மேற்கொள்ளவும், சாட்சியம் திரட்டவும் ஆலோசிக்கப்படும். அதற்கான வலியுறுத்தலை சட்டமா அதிபரிடம் முன்வைப்பேன்.

சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல் பிடிக்குள் சிக்குப்படாமல் இருப்பதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும் அரசு பொறுப்புடன் செயற்படும் என்பதைக் குறிப்பிட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

---

## மேற்குலகைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"மேற்குலக நாடுகளைப் பகைத்துக்கொண்டுதான் மஹிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

போர் முடிவடைவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் வந்தனர். அமெரிக்காவில் இருந்தும் குழுவொன்று வந்தது. போரை நிறுத்துமாறு மஹிந்த ராஜபக்ஷவிடம் அவர்கள் வலியுறுத்தினர்.ஏனெனில் பிரபாகரனை உயிருடன் கொண்டு செல்ல முயற்சித்தனர். அவர்களின் கோரிக்கைக்குச் செவிமடுக்காமல் மஹிந்த போரை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

1987 வடமராட்சி சமரின்போது இந்தியா பருப்புப் போட்ட வேளை, ஜே.ஆர். ஜயவர்தன போரை நிறுத்தினார். அன்று போரை நிறுத்தி இருக்காவிட்டால் 4, 5 நாட்களில் போர் முடிந்திருக்கும்.

வெளிநாடுகளுக்குப் பணிந்து அன்று போரை நிறுத்தினர். மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியவில்லை. மேற்குலகைப் பகைத்துக்கொண்டு போரை முடிக்க அரசியல் தலைமைத்துவத்தை வழங்கினார். அதனால்தான் மஹிந்தவுடன் மேற்குலகம் பகையாக உள்ளது. தமிழ்ப் பிரிவினைவாத டயஸ்போராக்களும் அவர்மீது பகை வைத்துள்ளனர். இதனால் மஹிந்தவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நோயாளர் படும்பாடு

மூக்கிருக்கும் வரை சளி இருக்கும் என்பர். கடல் இருக்கும் வரை அலை இருக்கும் என்பர்.

அந்த மாதிரி இலங்கையில் சுகாதாரத் துறை இருக்கும் வரை அரச வைத்திய சாலைகளில் மருந்துகள், மருத்துவ உபகரணங்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்து நீடிக்கும் என்றே கருதப் படுகின்றது. இலங்கையின் ஆட்சித் துறையும் சுகாதாரத்துறையும் மேற் கொள்ளும் நிர்வாகச் சீத்துவம் அத்தகையது.

இப்போதும் மருந்துப் பற்றாக்குறைகள் தொடர்பான செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

கொழும்பு தேசிய வைத்திய சாலை உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் தேசிய, மாவட்ட மற்றும் பிராந்திய அரச வைத்தியசாலைகளில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு தேவையான பல அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நோயாளிகள் தம் சொந்தச் செலவில் வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இந்தச் சூழ்நிலை பல நோயாளிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் வைத்தியசாலை ஊழியர்கள் கூறுகின்றனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பல வார்டுகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் நோயாளிகள், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை தாங்களாகவே கொண்டு வரப் பரிந்துரைக்கப்படுகின்றனர் எனவும், அவற்றை வாங்குவதற்குப் பணம் இல்லாததால் பல நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அறுவை சிகிச்சைக்குத் தேவையான சில வகையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நோயாளிகள் தனிப்பட்ட முறையில் வாங்க வேண்டியுள்ளனர் எனவும், இந்த மருந்துகள் மற்றும் உபகரணங்களில் சிலவற்றிற்கு 25 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபா அல்லது அதற்கும் அதிகமாகச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் வைத்தியசாலை ஊழியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த சூழ்நிலையில் அரசாங்கம் தலையிடாவிட்டால், பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

மேலும், பல பிராந்திய வைத்திய சாலைகளுக்கு வருகை தரும் நோயாளிகளுக்கு வழங்கப் போதுமான மருந்துகள் இல்லை என்றும், நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் கடுமையான பற்றாக்குறையாக இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

வெளியில் மருந்துகளை - மருத்துவ உபகரணங்களை - கொள்ளளவு செய்யக்கூடிய நிலையில், அரச வைத்தியசாலைகளில் மட்டும் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இருக்குமாயின் அந்த மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு அல்லது பற்றாக்குறை இருப்பதாகக் கூறுவது தவறாகும்.

வெளிச் சந்தையில் அந்தப் பொருட்கள் தாராளமாக இருக்க, அவை அரச வைத்தியசாலைகளில் இல்லை என்றால் வைத்தியசாலை நிர்வாகத்தில் அல்லது மருத்துவத்துறை கண்காணிப்பில் தவறு இருப்பதாகவே அர்த்தம்.

நாட்டு மக்களுக்கு மிக அத்தியாவசியமான சேவையை வழங்கும் மருத்துவத் துறையின் நிர்வாகத்தில் இருப்போரும், அரசு அதிகாரிகளும், அரசுத் தலைவர்களும் இவ்விடயத்தில் மிகுந்த கவனம் எடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கான சுகாதார சேவையில் நிலவும் குறைபாடுகளுக்குப் பொறுப்பு கூறல் சரியாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.



# வடக்கு மாகாணத்தால் முன்மொழியப்படவுள்ள திட்டங்கள் பற்றி ஆளுநர் தலைமையில் மீளாய்வு

2025ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்துக்கு வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படவுள்ள நிதிக்கு வடக்கு மாகாணத்தால் முன்மொழியப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான மீளாய்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஒவ்வொரு அமைச்சுக்கள் அதன் கீழான திணைக்களங்களுக்கு ஒதுக்கப்படவுள்ள நிதி விவரங்கள் மற்றும் அந்த நிதியில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆளுநருக்குப் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்தின் திட்டமிடல் – பணிப்பாளர் கே.சிவசந்திரன் தெரியப்படுத்தினார்.

முன்வைக்கப்பட்ட திட்டங்களை ஒக்டோபர் மாதத்துக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டியது அந்தத் திணைக்களத் தலைவர்களின் பொறுப்பு என ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும் சில திட்டங்கள் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி முன்மொழியப்பட்டிருந்த நிலையில், அதை மீளாய்வு செய்து, வன்னிப் பிராந்தியத்துக்கு மாற்றுமாறும் ஆளுநர் யோசனை முன்வைத்தார்.

குறிப்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் யாழ்ப்பாணத்தில் சில வீதிகளைத் தரமுயர்த்தும் செயற்றிட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அதைவிடுத்து வன்னியிலுள்ள விவசாயிகள் அதிகம் பயன்படுத்தும் வீதிகளை புனரமைக்க நிதி ஒதுக்குமாறும் பணித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், பிரதிப் பிரதம செயலாளர் – நிதி எஸ். குகதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.












# 65 வயதிற்குட்பட்ட ஓய்வுபெற்ற சாரதிகளுக்கு மீண்டும் சந்தர்ப்பம்

65 வயதுக்குட்பட்ட ஓய்வுபெற்ற சாரதிகள் மற்றும் நடத்துநர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

ஊழியர் பற்றாக்குறைக்கு தீர்வாக இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

இதற்கு அரசாங்க சேவை ஆணைக் குழுவின் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நடத்துனர்கள், சாரதிகளுக்கு நிலவும் வெற்றிடங்கள் காரணமாக இலங்கை போக்குவரத்து சபை சேவைகளை வினைத்திறனுடன் நடத்த தடை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தனியார் மருத்துவக் கல்லூரிகளின் பயிற்சிக்கு அரச வைத்தியசாலைகளில் அனுமதி இல்லை

தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவப் பயிற்சிக்காக சில அரச வைத்தியசாலைகளை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க கடந்த அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக



பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி குறிப்பிட்டுள்ளார்.

சிலாபம் ஆதார வைத்தியசாலை, சீதுவ விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை உள்ளிட்ட சில வைத்தியசாலைகளில் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு மருத்துவப் பயிற்சிகளை வழங்குவதற்கு கடந்த அரசாங்க காலத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கு அரசாங்கம் தற்போது எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு திறனை அதிகரிக்கத் திட்டம்



சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு திறனை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்த பகுதியில் புதிய சுத்திகரிப்பு கட்டமைப்பு நிர்மாணிக்கப்படவுள்ளதாக அமைச்சர் குமார ஜயகொடி குறிப்பிட்டார்.

இதனூடாக நாளாந்தம் 120,000 பீப்பாய்கள் எரிபொருளை சுத்திகரிக்க முடியும் என அவர் கூறினார்.

தற்போது சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தினூடாக நாளாந்தம் 40,000 பீப்பாய்கள் எரிபொருள் சுத்திகரிக்கப்படுவதாக அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்தார்.

புதிய சுத்திகரிப்பு கட்டமைப்பை நிர்மாணிப்பதற்காக தற்போது அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# மட்டக்களப்பில் வேலையற்ற பட்டதாரிகள் அரச நியமனம் கோரி நேற்று ஆர்ப்பாட்டம்






**(கனகராசா சரவணன் )**

மட்டக்களப்பில் வேலையற்ற பட்டதாரிகள் அரச நியமனங்கள் கோரி காந்தி பூங்காவில் நேற்று வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் அழைப்பை அடுத்து காந்தி பூங்காவில் ஒன்றிணைந்த வேலையில்லாப் பட்டதாரிகள் தங்களுக்கு அரச நியமனத்தை வழங்கக் கோரி சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உறுதிப்படுத்து, காட்டாதே காட்டாதே பாரபட்சம் காட்டாதே, அழிக்காதே அழிக்காதே எங்களது கனவுகளை அழிக்காதே, வயது ஏறுது வாழ்க்கை போகுது வேலைவேண்டும்.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து பழைய கச்சேரியில் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்த பின்னர் ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.



# வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சீன நிவாரண உதவிகளை தூதுவரே நேரில் வழங்குவார்

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதித்த குடும்பங்களிற்கு நாளையும் மறுதினமும் (9ஆம், 10ஆம் திகதிகளில்) சீனத் தூதுவரால் நிவாரணப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கிற்கு இரு நாள் பயணமாக நாளை 9ஆம் திகதி வரும் சீனத் தூதுவர் 9ஆம், 10ஆம் திகதிகளில் வடக்கின் மாவட்டங்களிற்கு பயணித்து நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கவுள்ளார் என மாவட்டச் செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 10 ஆம் திகதி ஆயிரத்து 70 பேருக்கும், ஏனைய மாவட்டங்களில் தலா 350 குடும்பங்களிற்கும் இந்த நிவாரணப்பொதிகள் வழங்கப்படவுள்ளன எனத் தூதரகம் அறிவித்துள்ளது.

நிவாரண விநியோகங்களைத் தொடர்ந்து சில சந்திப்புக்களிலும் தூதுவர் ஈடுபடவுள்ளார் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# ஜனாதிபதி நிதிய சேவைகளை பிரதேச செயலாளர் அலுவலகங்களுடாக வழங்குவதற்கு நடவடிக்கை

1978 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை நேற்று முதல் பிரதேச செயலாளர் அலுவலகங்களூடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள 341 பிரதேச செயலாளர் அலுவலகங்களில் இந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் பயிற்றுவிக்கப்பட்ட பணிக்குழுவினரால் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் இந்த பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

PMD
ජනාධිපති මාධ්‍ය අංශය
ஜனாதிபதி ஊடகப் பிரிவு
PRESIDENT'S MEDIA DIVISION

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை மக்களுக்கு நெருக்கமாக கொண்டுச் செல்வதற்கும் அதனூடாக உரிய வகையில் கிடைக்க வேண்டியவர்களுக்கு அந்த சேவையை பெற்றுக்கொடுக்கும் இயலுமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# செட்டிபாளையம் சிவனாலய மகா கும்பாபிஷேகம் நாளை

மட்டக்களப்பு செட்டிபாளையம் சிவன் ஆலய மகா கும்பாபிஷேகம் 05 ஆம் திகதி புதன்கிழமை கிரியைகளுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து மகா கும்பாபிஷேகம் நாளை 09 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தமூர்த்தி குருக்கள் முன்னிலையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.ஜனார்த்தனன் சர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெற்று 20 ஆம் தேதி 1008 சங்காபிஷேகத்துடன் நிறைவடையும் என ஆலய பரிபாலன சபையின் செயலாளர் ம.புவிதரன் தெரிவித்தார்.

எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நேற்றும் இன்றும் நடைபெறுகிறது.

**வரலாறு**

மட்டக்களப்பு மாவட்டத்தின் செட்டிபாளையம் புண்ணிய பதியில் இந்த சிவன் ஆலயம் அமைந்



துள்ளது . இத்திருத்தலத்தில் தென் திசை நோக்கி கருவறையில் தட்சணாமூர்த்தியாக சிவலிங்க வடிவில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார்.

வேண்டுவோர் வேண்டியபடி அருள்பாலிக்கும் அருளாட்சி நிறைந்த ஆலயமாக செட்டிபாளையம் சிவன் ஆலயம் பிரசித்திபெறுகிறது.

இவ்வாலய கருவறையில் அமைந்துள்ள மூல மூர்த்தி சோமகலா நாயகி சமேத சோமநாதலிங்கேஸ்வர் என அழைக்கப்படுகின்றார்.

ஆன்மீகத்துறவி ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்த கிரி சுவாமி அவர்கள் இந்திய காஷ்மீர் தேசத்தில் இருந்து 1939 களில் இலங்கை வந்து மட்டக்களப்பு செட்டிபாளையம் கிராமத்தில் சிவன் ஆலயத்தினை நிறுவி மக்களை ஆன்மீக வழியில் செப்பனிட்டு சமுகத்தை நேசிக்கும் நல்லதொரு பரம்பரையினரை உருவாக்கினார்.

இவ் ஆலயம் இலங்கையில் தென்திசை நோக்கிய சிவன் ஆலயமாகும். மற்றும் மட்டக்களப்பில் எழுவான் கரையில் அமைந்துள்ள தட்சணாமூர்த்தி வடிவில் மூலவராக சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் புகழ்பெற்ற சிவதலமாகும்.

இந்தியாவின் காஷ்மீர் தேசத்தில் அவதரித்த ஆன்மீக துறவி ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமி அவர்கள் பத்திரிகேதாரம், விசாகபட்டினம், கல்கத்தா, காசி, அயோத்தி, மணிப்பூர், திருவண்ணாமலை, திருச்சி மற்றும் ஸ்ரீரங்கம் முதலான புண்ணிய தலங்களுக்குச் சென்று இறை அருளாசி பெற்று பாண்டுவா என்ற இடத்தில் மகரிஷி ஒருவருடன் இருந்தபோது சுவாமிஜி அவர்களுக்கு சிவபெருமான் ஒரு வேடுவன் உருவத்தில் தோன்றி தாயத்தும் மணியும் அளித்தார் என கலியுக மாயப்பெண் என்னும் இந்தியாவில் வெளியிடப்பட்ட நூலின் மூலமாக அறியமுடிகிறது.

ஈழத்திருநாட்டிற்கு 1939 ஆண்டு தலைமன்னார் ஊடாக கால்பதித்த சுவாமிஜி அவர்கள் குறிப்பாக கிழக்கு மாகாணம் பூராகவும் கிராமம் கிராமமாக சென்று தனது ஆன்மிக பணியை ஆற்றி வந்தார். இந்துமத தத்துவ கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பினார். சமய சொற்பொழிவுகள், கூட்டு வழிபாடு, கூட்டுப் பிரார்த்தனை, பண்ணிசை பாடுதல் முதலான இறை வழிபாடுகளை ஊக்கப்படுத்தினார். சிவ சின்னங்களை தரிக்க செய்தார்.சிவபுராணங்களை நிதமும் ஓதுவதற்கு வழி காட்டினார். இவரது போதனைகளுக்கு பெருவாரியான மக்கள் வெள்ளம் அணி திரண்டது. இவரின் மேல் தீராத பக்தி கொண்ட மக்கள் இவரை தங்கள் வாழ்வின் ஆன்மீக குருவாக வழிபட தொடங்கினர்.

இதன் ஈறாக திருகோணமலை குச்சவெளியில் செம்பீஸ்வரர் ஆலயத்தை தளமாக கொண்டு மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் கிருஷ்ணன் கோவில் மற்றும் செட்டிபாளையத்தில் சிவன் ஆலயத்தையும் மக்கள் பங்களிப்புடன் நிறுவினார்.

குறிப்பாக இவர் செட்டிபாளையத்தில் பல ஆண்டு காலம் தங்கியிருந்து மக்கள் மத்தியில் புரையோடிப் போயிருந்த சிந்தனையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களை ஆன்மீக வழியில் செப்பனிட்டமையோடு சமூகத்தின் மீது அக்கறை கொண்டு பணிகளை ஆற்றக்கூடிய வல்லமையினையும் மக்களுக்கு விதைத்தார்.

ஆலயத்தையும் சமூகத்தையும் ஒருங்கே நேசிப்பதற்காக ஆலயம் ஆரம்பித்த காலத்திலேயே திருவருள் சங்கத்தை ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியாக நிறுவி ஆளுமை மிக்க நல்பக்தர் குழாத்தினை உருவாக்கினார். இதற்காக புராண இதி

தொடர்ச்சி▼

# செட்டிபாளையம் சிவனாலய மகா கும்பாபிஷேகம் நாளை

**தொடர்ச்சி▲**


காசத்தில் கூறப்பட்ட கருத்துக்களை கையாண்டார்.

செட்டிபாளையத்தில் 1940ஆம்ஆண்டு சுவாமி அவர்களின் அருள் ஆசியினால் மக்களின் அயராத பங்களிப்பினாலும் சிவன் ஆலயத்தை நிறுவினார். மக்கள் சிவனை குடிசையில் வைத்து வழிபட்டு வந்தனர். அக்காலங்களில் கூட்டு பிரார்த்தனை வழிபாடு, சமய போதனைகள் சுவாமி அவர்களால் நிகழ்த்தப்பட்டு வந்தது. மக்கள் மத்தியில் புத்தொளி தோன்றியது. சுவாமிஜி அவர்கள் இந்தியா சென்ற போதிலும் அங்கிருந்து கடிதப் பரிமாற்றங்கள் ஊடாக மக்களது ஆன்மிக நாட்டத்தை இடையறாது கட்டிக் காத்து வந்தார்.

இதன் பிற்பட்ட காலங்களில் குறிப்பாக 1952



ஸ்ரீலஸ்ரீ.சோமேஸ்வரானந்த கிரி சுவாமிகள்
சிவன் ஆலயம்.செட்டிபாளையம்




களில்ஆலயத்தினை கல்லினால் அமைக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு திருவருள் பெண்கள் சங்கத்தின் பிடியரிசி சேகரிப்பும், திருவருள் ஆண்கள் சங்கத்தின் சந்தா பண அறவீடு மற்றும் கிராம மக்களின் நிதி பங்களிப்பும் ஆலய கட்டுமானத்திற்கு கை கொடுத்தது.

எனினும் 1978ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியினால் ஆலய கட்டுமானம் பாதிக்கப்பட்டது. இருந்த போதிலும் ஆலய நிருவாகத்தினரின் அயராத முயற்சியின் காரணமாக சூறாவளியினால் பாதிக்கப்பட்ட ஆலயத்தினை அதே இடத்தில் 1981ஆம் ஆண்டு தென் திசை நோக்கி அமர்ந்த மூலவரை பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகத்தை மக்கள் நிறைவு செய்திருந்தனர்.

மூல மூர்த்தியானது இவ்வாலயத்திற்கு கிடைத்த வரலாறு இன்று வரை அதிசயமாகவே பார்க்கப்படுகின்றது. ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமி அவர்கள் மக்களிடம் தாங்கள் வழிபடுவதற்கு ஒரு மூல மூர்த்தி உங்கள் ஆலயம் விரைவில் வந்து சேரும் என்று குறிப்பிட்ட போதிலும் யாரும் எதிர்பாராத வேளை ஒருநாள் வம்மிமர நிழலில் சிவலிங்கம் இருப்பதனை கண்ணுற்ற மக்கள் ஆச்சரியமடைந்தனர். இறைவனின் திருவிளையாடல் என

நினைந்து அச் சிவலிங்கத்தையே மூல மூர்த்தியாக பிரதிஷ்டை செய்து வணங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தோடு இவ் ஆலய கட்டுமானத்திற்காக வங்கக் கடலோரம் ஆலயத்திற்கு சரிநேராக கரையொதுங்கிய பெரிய தொரு மரத்தினை மக்கள் கண்டெடுத்து இதையொரு இறையருளாக நினைந்து ஆலயத்திற்கு வழங்கியதாகவும் அந்த மரத்தின் மூலமே ஆலயம் முழுவதற்குமான கூரை அமைக்கப்பட்டதாகவும் பண்டிதர் வீ. சி. கந்தையா தனது ஈழத்து ஆலயங்கள் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவை இரண்டும் பேரதிசயமாக இன்று வரை மக்களால் பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வளர்ச்சி மிக்க பின்புல சூழலில் 1990ஆம் ஆண்டுகளில் செட்டிபாளையத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. இவ் இராணுவ முகாம் எல்லைக்குள் இவ்வாலயமும் உள்வாங்கப்பட்டது. இதன் காரண-மாக ஆலயம் பல்வேறு விதமான பாதிப்புகளை எதிர் கொண்டது. அக்காலத்தில் மக்கள் வழிபட முடியாத சூழ்நிலை காணப்பட்டது. எம்பெருமானின் பூஜை வழிபாடுகளுக்கு மட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டது. ஆலய கட்டுமானம் பாதிப்புகளை எதிர்கொண்டது.

2011ஆம் ஆண்டு இராணுவ முகாம் அகற்றப்படும் வரை இவ்வாலயத்தின் பகுதிகள் உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் சேதமாக்கப்பட்டது.

இவ்வேளை 2013ல் புதிய நிருவாக சபை பொறுப்பெடுத்தது. இதுவரை காலம் யுத்த வடுக்களை சுமந்திருந்த கிராம மக்களுக்கு சுவாமிஜியின் போதனைகளுக்கு இணங்க பொறுப்பெடுத்த நிருவாகம் சமூக மற்றும் கல்விப் பணிகளை உத்வேகத்துடன் முன்னெடுத்தது. இருந்த போதிலும்

பாதிக்கப்பட்ட ஆலயத்தை தொடர்ந்து வழிபட முடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டது. இந்நிலையில் 2016ஆம் ஆண்டு புதிய நிருவாக சபை தோற்றுவிக்கப்பட்டது. மக்கள் வழிபடுவதற்கு ஆலயத்தை புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்தனர் நிருவாக சபையின் தலைமைத்துவத்தை மூனா.பாலகிருஷ்ணன் அவர்கள் பொறுப்பெடுத்தார். இவரது தலைமைத்துவத்தில் புதிய சிந்தனைகள் உள்வாங்கப்பட்டது.

புதிய ஆலய கட்டுமானத்திற்கான எண்ணகருவினை அவர் விதைத்தார்.

இந்தப் பின்னணியில் திருவருள் சங்கத்தின் நிருவாகமும் கிராம மக்களும் புதிய ஆலயம் ஒன்றை கவின் கலை நுட்பத்துடன் அமைப்பதற்கு தீர்மானித்தனர்.

2016.11.05ஆம் திகதி புதிய ஆலயத்திற்கான அடிக்கல் சிவஸ்ரீ சச்சிதானந்தமூர்த்தி குருக்கள் ஐயா அவர்களினால் நாட்டி வைக்கப்பட்டது. இந்நிகழ்வினை ஆலய தலைவர் மூனா பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமை தாங்கினார். கிராம மக்களும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சிவபக்தர்களும், இலங்கை தேசம் மற்றும் புலம்பெயர் தேசத்தில் வாழும் மக்களதும் நிதிப் பங்களிப்போடு புதிய ஆலயம் அமைக்கப்பட்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2025ஆம் ஆண்டு ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவாதிரை நட்சத்திர சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு இறைஅருட்கடாட்சம் கிடைத்துள்ளது.

இந்த புதிய ஆலய கட்டுமானத்தில் நிருவாக சபையினதும் ஏனைய தொண்டர்களினதும் கிராமப் பொது மக்களினதும் அயராத பங்களிப்பு காத்திரமானது.

- வித்தகர் விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா -



# இந்துக்களின் போரில் யாழ். அணி முன்னிலை

(பிரபாகரன் டிலக்சன்)

14ஆவது இந்துக்களின் போர் துடுப்பாட்டப் போட்டியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 152 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளதோடு போட்டியில் ஆதிக்கம் செலுத்திவருகின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

14ஆவது இந்துக்களின் போர் துடுப்பாட்டப் போட்டியில் பரிஸ்சித் தலைமையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் தேஸ்கர் தலைமையில் கொழும்பு இந்துக் கல்லூரியும் களமிளங்கின. இரண்டு நாட்கள், இரண்டு இன்னிங்ஸ்களைக் கொண்டதாக இப் போட்டி இடம்பெறுகின்றது.

நேற்று ஆரம்பித்த இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் இந்து கல்லூரி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அதற்கு அமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதல் இன்னிங்சில் 43.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் இந்துக்கல்லூரி சார்பில் விதுர்சன் 49 ஓட்டங்களையும், பரிஸ்சித் 20ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் கொழும்பு இந்து கல்லூரி சார்பில் யுவராஜ் 10 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்களையும் ஸ்ரீ நிதுஷன், தேஷ்கர் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை அதிகபட்சமாக வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு தனது முதலாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி 32.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 91 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் கொழும்பு இந்துக் கல்லூரி சார்பில் சந்தோஷ் 42 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் யாழ் இந்து கல்லூரி சார்பில் நித்திஷ் 4.5 ஓவர்கள் மாத்திரம் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 12 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்களையும் சுபர்ணன், விதுர்ஷன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

81 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ள யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தனது இரண்டாம் இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட்டத்தை ஆரம்பித்து, 16 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 71 ஓட்டங்களை பெற்றபோது முதலாம் நாள் ஆட்டம் நிறைவிற்கு வந்தது.

துடுப்பாட்டத்தில் இந்துக் கல்லூரி சார்பில் பரிஸ்சித் 39 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் கொழும்பு இந்து கல்லூரி சார்பில் ஸ்ரீ நிதுசன், யுவராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 152 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ள நிலையில் இன்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறவுள்ளது.

இதுவரை இடம்பெற்ற இந்துக்களின் போர் துடுப்பாட்டப் போட்டியில் இரு கல்லூரிகளும் தலா மூன்று தடவைகள் வெற்றிபெற்றிருக்கின்றன. 7 போட்டிகள் வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவடைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.





# தமிழக மீனவர்களை பாதுகாக்க உறுதியான நடவடிக்கை வேண்டும்

## மத்திய அரசுக்கு முத்தரசன் வலியுறுத்தல்



“மீன்பிடித்தல் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் 2008 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் உணர்வை இலங்கை அரசு அலட்சியம் செய்து வருகிறது. மத்திய அரசின் வெளியுறவுத்துறை அரசியல் உறுதியுடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும்,”

– இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்.

“தமிழ்நாடு ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்துக்கும் அதிக நீளம் கொண்ட கடற்கரையை பெற்றுள்ளது. 14 கடலோர மாவட்டங்களில் உள்ள நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்கள் மற்றும் கிராமங்கள் மீன்பிடி தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன. இங்கு வாழும் மீனவர்களுக்கு வங்கக் கடல் தான் வாழ்வாதாரமாகும். கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குவது தொடர்ந்து நடைபெறுகிறது. அண்மைக் காலமாக, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை இலங்கை அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி கடலுக்கு சென்ற 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள், உரிய அனுமதியுடன் கடலுக்கு சென்றுள்ளனர். இவர்கள் கச்சதீவு – நெடுந்தீவுக்கு இடையே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினர் ஐந்து ரோந்து படகுகளில் வந்து தாக்குதல் நடத்தி, 34 மீனவர்களை கைது செய்துள்ளனர். இவர்களிடம் இருந்து மூன்று விசைப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நீதிமன்றம் 34 மீனவர்களில் 16 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா (இலங்கை பண மதிப்பில்) வீதம் அபராதம் விதித்து, அபராதம் கட்டத் தவறினால் ஆறு மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது.

இதேபோல, இரு படகு ஓட்டுநர்களுக்குக்கும், ஒரு படகு உரிமையாளருக்கும் தலா 60, 50 லட்சம் ரூபா அபராதம் விதித்து, இந்த அபராதத் தொகையை கட்டத் தவறினால் ஓராண்டு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது. மேலும் 15 மீனவர்கள் படகு குறித்த ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு, மூன்று விசைப் படகுகளை அரசுடைமையாக்கியுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் இலங்கை கடற்படையினர் சுட்டதில் சின்னக்குடி மீனவர் பாண்டியன் உயிரிழந்தார். இலங்கை தூதரை நேரில் அழைத்து கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மீன்பிடித்தல் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையில் 2008 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் உணர்வை இலங்கை அரசு அலட்சியம் செய்து வருகிறது. மத்திய அரசின் வெளியுறவுத்துறை அரசியல் உறுதியுடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# பா.ஜ.க. அரசுக்கு எதிராக காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்




அமெரிக்காவில் இந்திய குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க தவறியதாக கூறி, மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் கை, கால்களில் விலங்கிட்டு சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவில் உரிய அனுமதியின்றி வசித்து வந்த 104 இந்தியர்களை கை, கால்களில் விலங்கிட்டு வெளியேற்றப்பட்ட சம்பவத்தை குறிப்பிட்டு இந்திய குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மத்திய அரசு பாதுகாக்க தவறிவிட்டது. இந்த விவகாரத்தில் அமெரிக்காவை மத்திய அரசு கண்டிக்கவில்லை எனக் கூறி, மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் சென்னை அண்ணாசாலை, தாராபூர் டவர் அருகே நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் நிர்வாகிகள் கை, கால்களில் விலங்கிட்டு தரையில் அமர்ந்து நூதன முறையில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் செல்வப்பெருந்தகை கண்டன உரையாற்றி பேசுகையில்,

“நமது இந்தியர்களை கைவிலங்கிட்டு வெளியேற்றிய அமெரிக்காவை கண்டித்து எந்தவித கண்டன அறிக்கைகளையோ, அமெரிக்கா செய்வது தவறு என்றோ சுட்டிக்காட்டாமல் பிரதமர் மோடி மௌனம் காக்கிறார். இதுவரை அமெரிக்க தூதரை அழைத்து கூட கண்டனத்தை தெரிவிக்கவில்லை. உரிய அனுமதி இன்றி இந்தியாவில் தங்கும் வெளிநாட்டினரை, இந்தியா இவ்வாறு நடத்தியதில்லை.

அந்நாட்டின் பொலிஸ் தலைவர், இந்தியர்களை இந்த உலகத்தின் ஏலியன்கள் என்று சொல்லுகிறார். அதையும் மோடி கண்டிக்கவில்லை. இந்தியர்களுக்கு விலங்கிட்டதை, நாட்டுக்கு ஏற்பட்ட தலைகுனிவாக பார்க்கிறோம். வெளியுறவு கொள்கையில் இந்தியா தோல்வி அடைந்துள்ளது. பா.ஜ.க. அரசு, அமெரிக்காவிடம் தனது கண்டனத்தை பதிவு செய்ய வேண்டும். இராஜ ரீதியான உறவுகளை முறிக்கவேண்டும்.

இதுபோன்று காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நடந்தபோது, காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுத்தது. காங்கிரஸ் ஆட்சியில் பிரதமர்கள் இந்தியர்களை தலை நிமிர வைத்தார்கள். மன்மோகன் சிங் ஆட்சியில் எதிர்வினை ஆற்றியது போல் இவர்களால் எதிர்வினை ஆற்ற முடியவில்லை. அமெரிக்கா தவறு செய்திருக்கிறது என்பதை இவர்களால் பதிவு செய்ய முடியவில்லை இதை வன்மையாக காங்கிரஸ் கண்டிக்கிறது.” என்று தெரிவித்தார்.

# காசாவின் இனப்படுகொலையை விசாரிக்கும் சர்வதேச நீதிமன்றத்திற்கு ட்ரம்ப் தடை விதிப்பு

இஸ்ரேல் போன்ற அமெரிக்க நட்பு நாடுகளின் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகப் பொருளாதார மற்றும் பயணத் தடைகளை விதிக்கும் நிர்வாக உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.



காசாவிலிருந்து மில்லியன் கணக்கான பலஸ்தீனர்களை வெளியேற்றும் ட்ரம்பின் திட்டம் மீண்டும் யுத்தத்தைத் தூண்டும் என்று எகிப்து தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஜோர்தான் மத்திய கிழக்கில் குழப்பத்தைப் பரப்பி இஸ்ரேலுடனான அதன் அமைதியைப் பாதிக்கும் என்று எச்சரித்துள்ளது.

யுத்தம் நிறைவுற்று என்கிளேவின் மக்கள் வேறு இடங்களில் மீள் குடியேற்றப்பட்ட பிறகு, இஸ்ரேல் காசாவை அமெரிக்காவிடம் ஒப்படைக்கும் என்று ட்ரம்ப் கூறினார்.

இதன் பொருள் தரையில் எந்த அமெரிக்கப் படைகளும் தேவையில்லை என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

காசா மக்களைத் தாமாகவே முன்வந்து வெளியேற அனுமதிக்கும் திட்டத்தைத் தயாரிக்க இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் அந்நாட்டு இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

# அமெரிக்காவின் இராணுவ விமானம் பிலிப்பைன்ஸில் விபத்து; நால்வர் பலி



அமெரிக்க இராணுவத்தால் ஒப்பந்தம் செய்யப்பட்ட விமானம் ஒன்று தெற்கு பிலிப்பைன்ஸில் உள்ள நெல் வயலில் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் ஒரு அமெரிக்க சேவை உறுப்பினர் மற்றும் மூன்று பாதுகாப்பு ஒப்பந்ததாரர்கள் உயிரிழந்துள்ளனர் என அமெரிக்க இந்தோ – பசுபிக் கட்டளை தெரிவித்துள்ளது.

விமானம் பிலிப்பைன்ஸ் நட்பு நாடுகளின் வேண்டுகோளின் பேரில் உளவுத்துறை, கண்காணிப்பு மற்றும் உளவுத்துறை ஆதரவை வழங்கும் ஒரு வழக்கமான பணியை நடத்திக் கொண்டிருந்ததாக ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்பாடத நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆயபரனைியயெழ னநட ளுரச மாகாணத்தில் இராணுவ விமானம் வி–பத்துக்குள்ளானதை பிலிப்பைன்ஸின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையமும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஏனைய விவரங்களை உடனடியாக அவர்கள் வழங்கவில்லை.

அம்பட்டுவான் நகரில் இடிபாடுகளில் இருந்து நான்கு பேரின் உடல்கள் மீட்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேநேரம், விமானம் விபத்துக்குள்ளான போது, சம்பவம் நடந்த இடத்தின் அருகில் இருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

எனினும், விமானம் விபத்தின் விளைவாக தரையில் இருந்த ஒரு எருமை இறந்ததாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்லாமிய போராளிகளுடன் போரிடும் பிலிப்பைன்ஸ் படைகளுக்கு அறிவுரைகளையும் பயிற்சிகளையும் வழங்குவதற்காக பல தசாப்தங்களாக நாட்டின் தெற்கில் உள்ள பிலிப்பைன்ஸ் இராணுவ முகாமில் அமெரிக்கப் படைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதி ரோமன் கத்தோலிக்க தேசத்தில் சிறுபான்மை முஸ்லிம்களின் தாயகமாக உள்ளது.

# அவுஸ்திரேலியாவில் வீடொன்றில் 102 விஷப் பாம்புகள் கண்டுபிடிப்பு

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரத்தில் உள்ள ஒரு வீட்டின் தோட்டத்தில் 102 விஷ பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



வீட்டிலிருந்த ஒரு நாயைப் பாம்பு கடித்ததை அடுத்துத் தேடிய போது இந்தப் பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பாம்புகள் சிவப்பு நிற கழுத்துடன் கருப்பு தோல் போன்ற வடிவத்தில் உள்ளன. இந்த விஷபாம்புகள் அங்கு உள்ள ஒரு தேசிய பூங்காவில் விடப்பட உள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.02.2025

## மேஷம்

இன்று உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் பனியின் செயல்திறனில் உங்கள் திறமையை நிரூபிக்க சாதகமாக இருக்கும்.உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி பொங்கும்.

இன்று உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கு சாதகமான நாள். பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.

## ரிஷபம்

இன்று சில மாற்றங்கள் காணப்படும். அதற்கு தக்கவாறு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் பேசும்போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. யோகா மற்றும் தியானம் அனைத்து விதத்திலும் உங்களுக்கு நற்பயன் அளிக்கும்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும். என்றாலும் நற்பயன் கிடைக்க நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். உங்களின் புதுமையான கருத்துக்கள் மூலம் உங்கள் படைப்புத்திறன் பிரகாசிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் சமநிலையோடு நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.

## மிதுனம்

நீங்கள் இன்று எதிர்படும் சவால்களை விவேகத்துடனும் உறுதியுடனும் கையாள வேண்டும்.உற்சாகமான நேர்மறையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்காது. பனிச் சுமை காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியில் சிறந்த பலனைக் காண உங்கள் பணிகளை ஒழுங்காக திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் லேசான விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நகைச்சுவையான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணப்பற்றாக்குறை காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் தேவைகளை சந்திக்க போதிய பணம் கையில் இருக்காது.

## கடகம்

இன்று மிகவும் பரபரப்பாக காணப்படுவீர்கள். இன்று உங்களின் எளிமையான திட்டமிட்ட அணுகுமுறை மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். உறுதி மற்றும் தைரியம் மூலம் உயர்வான வெற்றியை அடைவீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பனியின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு நன்மை பெற்றுத் தரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்களின் இந்தப் போக்கின் காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு கணிசமாக அதிகரிக்கும். இன்று அதிக பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் நேர்மறையான ஆற்றல் காரணமாக நீங்கள் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## சிம்மம்

இன்று உங்கள் எதிர்காலம் பற்றிய அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். உங்கள் இலக்கை நோக்கி முயற்சி எடுப்பீர்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். அது உங்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தித் தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடனான உறவை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்ன வென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாடான அணுகு முறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

இன்று போதிய அளவு பண வரவு இருக்காது. ஏற்றத் தாழ்வு காரணமாக நிதியில் ஸ்திரத்தன்மை சாத்தியம் இல்லை.

## கன்னி

இன்று சில பதட்டமான சூழ்நிலை காணப்படும். அதிலேயே அதிக நேரம் கழியும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

பணிகளின் இயல்பு கடினமாக இருப்பதன் காரனமாய் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் பராமரிப்பிற்காக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தேவையற்ற வகையில் பணம் இழக்கும் வாய்ப்பு உள்ளது.

## துலாம்

இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. இன்று அவநம்பிக்கையும் பதட்டமும் காணப்படும். இசை கேட்பது அல்லது புத்தகம் படிப்பது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று பணிச்சுமை அதிகரித்துக் கொண்டே இருக்கும். உங்கள் பணிகளை இன்று எளிதாக முடிக்கும் நிலை காணப்படாது.

உங்கள் மனதில் ஏற்படும் குழப்பமான எண்ணங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். அதனை சமாளிப்பது இயலாத நிலையாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## விருச்சிகம்

இன்று மிகவும் வெற்றிகரமான நாளாக இருக்கும். நீங்கள் உங்கள் செயல்களை எளிதாகவும் மகிழ்ச்சியாகவும் மேற்கொள்வீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். அனைத்து விதத்திலும் வளர்ச்சி காணப்படும்.

பணியிடத்தில் நீங்கள் சிறப்பாகவும் தன்னிச்சையாகவும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்வுகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். வங்கியில் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.02.2025




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். இசை கேட்பது அல்லது திரைப்படம் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதை திசை திருப்பி ஆறுதல் பெறலாம்.

நீங்கள் பொறுமையின்றி செயல்படுவதை விட புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்ள இது அவசியம்.

உங்கள் துணையிடம்உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படும். கையிலிருக்கும் பணத்தைக் கொண்டு சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன் காண சாதகமான நாள் அல்ல. நீங்கள் உங்கள் முன்னேற்றம் குறித்து கவலைப் படுவீர்கள். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் பாதையில்வரும் தடைகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். பணிகளை நம்பிக்கையுடன் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது. உங்கள் நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நீங்கள் தவறான முறையில் நடந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை ஸ்திரத்தன்மை யின்றி காணப்படும். சேமிப்பதற்கும் குறைந்த வாய்ப்பே காணப்படும்.




இன்று அனைத்து செயல்களிலும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைப்பது கடினமாக உணர்வீர்கள். நீங்கள் பதற்றத்துக்கு ஆளாவீர்கள்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

சில தவறான புரிந்துணர்வின் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்படும்.

இன்று குடும்பத்தின் நலனுக்காக தேவையற்ற செலவுகள் காணப்படும். அதிக செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

1 2 3 4 5ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. கால் வலியால் பாதிக்கப்படலாம்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். ஆன்மீக ஈடுபாடு சிறந்த ஆறுதல் தரும். நீங்கள் விரைவில் புனித யாத்திரை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

பணியைப்பொறுத்தவரைநல்லபலனடைவீர்கள். உங்கள் கடின உழைப்புக்குப் பாராட்டும் அங்கீகாரமும் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனைணந்து வீட்டில் நடைபெறவிருக்கும் சுப நிகழ்ச்சி குறித்த திட்டங்களை திட்டுவீர்கள். இதனால் உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி கிட்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறிது பணம் இழக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




# 13 இந்திய மீனவர்களை விடுவித்து மன்னார் நீதிமன்றம் நேற்று உத்தரவு

**(மன்னார் நிருபர்)**

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் கைது செய்யப்பட்டவர்கள் என்று கூறப்படும் 17 இந்திய மீனவர்களில் 13 மீனவர்கள் விடுதலை செய்யப் பட்டனர். ஏனைய நான்கு மீனவர்களையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த 17 இந்திய மீனவர்களும் கடந்த டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களின் வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

17 இந்திய மீனவர்களில் இரு மீனவர்களுக்கு கைவிரல் அடையாளங்கள் பெறப்படாத காரணங்களினால் இரண்டு மீனவர்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.மேலும் இரண்டு மீனவர்களுக்கு இரண்டாவது தடவையாகவும் எல்லை தாண்டி சட்டவிரோத இழுவை மடி வலையை பயன்படுத்தி மீன் பிடித்த குற்றதிற்காக இரண்டு வருட கடுழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது .

ஏனைய 13 பேருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா தண்டப் பணத்துடன் கூடிய இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப் பட்ட 10 வருட சிறை தண்டனையும் விதிக்கப்பட்டு அவர்களை நீதிமன்றம் விடுவித்தது.